உ

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஞூ ஆவணி மீ 26 ஆம் உ
( 1889)

பிரதி விலை: ரூபா 12
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

# இந்து சாதனம் (HINDU ORGAN)

புத்தகம்: 112

விஷு வருடம் புரட்டாதித் திங்கள் 16 ஆம் நாள்
( 02-10-2001 ) புரட்டாதிப் பூரணை

இதழ்: 06

## இலங்கை சைவ உணவாளர் சங்கம்

### தரமான சைவ உணவகங்கள் பற்றித் தகவல்கள் சேகரிக்கிறது

## யாழ்ப்பாணத்தில்

# தரமான சைவ உணவகம்

## நிறுவ முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும்

**''இலங்கையில் சைவ உணவு பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள் பற்றித் தகவல் பெற வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் பலர் எம்முடன் அடிக்கடி தொடர்பு கொள்கிறார்கள். சைவ உணவு உட்கொள்ளும் பல வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் சைவ உணவு பெறக்கூடிய இடங்களை அறிந்து கொள்ள உலகின் பல்வேறு நாடுகளில் இயங்கும் சைவ உணவாளர் சங்கங்களின் ( Vegetarian Societies ) இணைய தளங்களில் (Websites) தேடுதல் நடத்துகின்றனர். ஆகவே இலங்கையில் தரமான சைவ உணவு பெறக்கூடிய விடுதிகளின் பட்டியலைத்தொகுத்து இலங்கை சைவ உணவாளர் சங்கத்தின் இணைய தளப்பக்கங்களில் சேர்த்துக்கொள்ள துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். ஆகவே இலங்கையிலுள்ள சைவ உணவாளர் விடுதிகள் தாம் அளிக்கும் வசதிகளை உடன் எமக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்''**

இவ்வாறு இலங்கை சைவ உணவாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்து சாதனம், முன்னைய இதழொன்றில் (புத்தகம் 111 இதழ் 10) சைவ உணவின் மேன்மையைப் பல்வேறு கோணங்களில் விரித்துக் காட்டியிருந்தான். மேலை நாடுகளில் சைவ உணவுக் கோட்பாட்டாளர்களின் தொகை அதிகரித்து வருவதையும், சீவகாருண்யம், சைவ உணவின் சிறப்பு, புலாலுண்பதால் ஏற்படும் தீமைகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, உறுதியான கொள்கை காரணமாக மேலைத்தேசத்தார் சைவ உணவைத் தழுவிவருவதையும் சுட்டிக்காட்டியிருந்தோம். இன்று மேலை நாடுகளில் பதினான்கு சதவீதத்தினர் சைவ உணவைத் தழுவியுள்ளனர். இதனால் சுற்றுலாப் பயணிகளிற் கணிசமானவர்கள் சைவ உணவாளர்களாயிருக்கின்றனர்.

இவர்கள் தமது (சைவ) உணவு, அசைவ உணவு தயாரிக்கப்படும் சமையற் கூடங்களில் தயாரிக்கப்படுவதை விரும்புவதில்லை. அசைவ உணவு தயாரிக்கும் பாத்திரங்களில் சைவ உணவு தயாரிப்பதையும் மிருகங்களிலிருந்து பெறப்பட்ட எண்ணைவகைகள் பொரிப்பதற்கு உபயோகப்படுத்தப்படுவதையும் விரும்புவதில்லை. அதனால் இப்போது இலங்கையில் ஒரு சில பெரிய உல்லாசப்பயணி விடுதிகள் சைவ, அசைவ உணவுகளைத் தயாரிக்க வெவ்வேறு சமையற் கூடங்களை அமைத்துள்ளன. சைவ உணவாளர்கள் இவ்வாறான வசதிகள் உள்ள உணவு விடுதிகளையே விரும்புகின்றனர்.

சர்வதேச சைவ உணவாளர் ஒன்றியத்தின் (International Vegetarian Union) பிரதம இணைய தளத்தின் (http//www.ivu) உலக விபரக்கொத்தில் (Global Directory)

(9ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழகத்தால் கௌரவிக்கப்படும்

# அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள்

இந்துசமய வளர்ச்சிக்கும் சமய இலக்கியத்துறைக்கும் அரும்பணி யாற்றிவரும் அருட்கவி விநாசித்தம்பி அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எதிர்வரும் 06-10-2001 ஆம் நாள் நடைபெற வுள்ள பட்டமளிப்பு வைபவத்தின் போது கௌரவ முதுகலைமாணிப் பட்டமளித்துக் கௌரவிக்கவுள்ளது.

அருட்கவி சீனியர் விநாசித்தம்பி அவர்கள் அளவெட்டியில் 1923 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் நாள் பிறந்தார். அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலை, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்ற பின், ஆசிரிய தராதரப் பத்திரம், சங்கீத ஆசிரிய தராதரப் பத்திரம், திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப் பயிற்சித் தராதரம் ஆகிய தராதரங்களுடன் இந்நாட்டின் பல பாடசாலைகளில் ஆசிரியப் பணி புரிந்தார்.

கவிதை புனையும் ஆற்றல் இயல்பாகவே கைவரப்பெற்ற இவர், பண்டிதர் சி. கதிரவேலு, பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை, தத்துவஞானி பொ. கைலாசபதி, திரு. சு. சுவாமிநாதன் ஆகியவர்களது தொடர்புகள் மூலம் தமது கல்வி, கவித்துவத் திறமைகளை மேம்படுத்திக் கொண்டார்.

சிறந்த சமயச் சொற்பொழிவாளராகவும் கதாப்பிரசங்கியாராகவும் விளங்கிய திரு. விநாசித்தம்பி அவர்கள், தமது சமய உரைகள் மூலம் சமய இலக்கியங்கள் தரும் உயர்ந்த கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி வருகிறார். பல ஆலயங்களிலும் வானொலியிலும் இவரது கதாப்பிரசங்கங்கள், சொற்பொழிவுகள், பண்ணிசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் திருக்கோவிலின் பாதுகாவலராக விளங்கும் திரு. விநாசித்தம்பி அவர்கள் அவ்வாலயத்தை மையமாகக் கொண்டு சமய நூல்களையும் தோத்திர நூல்களையும் எழுதி வெளியிட்டு வருகிறார். இவற்றுள் இவர் அண்மையில் வெளியிட்ட கந்த புராண வசன காவியம் குறிப்பிடத்தக்கவொன்று. அருட்கவி அவர்கள் தமது கவித்துவத் திறமையால் பல பாவடிவங்களில் கவிதை நூல்களைப் பாடி வெளியிட்டுள்ளார்.

சோதிடக்கலையறிவும் பெற்றுள்ள திரு. விநாசித்தம்பி அவர்கள் வீடுகள் அமைத்தற்குப் பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்தல் பற்றிய ஆலோசனைகள் வழங்குவதிலும் வல்லவராகக் கருதப்படுகிறார். அத்துடன் தமது தந்தையாரின் வழியில் பரம்பரை வைத்தியத்துறையிலும் ஈடுபாடுடையவர்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்துசமயப் பேரவை என்ற அமைப்பின் தலைவராக - ஆத்மஜோதி முத்தையா அவர்கள் மறைவின் பின்- கடந்த ஆறு ஆண்டுகளாகப் பணியாற்றிவருகிறார். இவரது பணிகளைப் பாராட்டிப் பல நிறுவனங்கள் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளன. அவற்றுள் 'அருட்கவி' என்ற பட்டம் சிறப்பாக அமைந்தது. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் 'அருள்மொழி அரசு' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது.

சமய, சமூகப்பணிகள் மூலம் திரு. விநாசித்தம்பி அவர்களுக்கு மக்கள் மத்தியில் உள்ள மதிப்பையும் அவரது கவித்திறனையும் கருத்திற்கெடுத்துக் கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு முதுகலை மாணிப் பட்டம் வழங்கத் தீர்மானித்துள்ளமை பொருத்தமானதே. அருட்கவி அவர்கள் நலமுடன் வாழ்ந்து சமய, சமூகப் பணிகளாற்றப் பார்வதி பரமேசுவரரைப் பிரார்த்திப்போமாக.

---

### சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரை

**நிகழ்த்துபவர்:** சேக்கிழார் அடிப்பொடி
தில்லைஸ்தானம் நடராஜன் இராமச்சந்திரன் (தமிழ்நாடு)

**இடம்:** கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்

**நாள்:** 09-10-2001 செவ்வாய்க்கிழமை பி. ப. 3.00 மணி

**பொருள்:** **பெரிய புராணத்தில் சமுதாயச் சிந்தனைகள்**
(பேருரை தமிழில் நிகழ்த்தப்படும்)

---

**சைவப்பெரியார் சிவபாதசுந்தரம்பிள்ளை பற்றிய கட்டுரை:** இடமின்மை காரணமாக இவ்விதழிலும் பிரசுரமாகாமைக்கு வருந்துகிறோம். அடுத்த இதழில் வெளிவரும்.

உ

# சிவநெறி

— திருமுருக. கிருபானந்தவாரியார் —

இறைவன் என்ற சொல் இறு என்ற பகுதியடியாகப் பிறந்தது. எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்து நிற்கின்றான். இனி, எல்லாம் அவனிடத்திலே இருக்க, அவன் அவைகட்கு உறைவிடமாகவும் இருக்கின்றான். இஃது இறைவனுடைய விசுவரூபம்.

எல்லாப் பொருள்களிலும் தங்க வேண்டுதலின், சிறிய - மிகச் சிறிய பொருளாக இருக்கின்றான். மேரு கிரி முதலிய பொருள்கள் யாவும் அவனிடத்திலே தங்கும்படி அப்பெருமான் மிகப் பெரிய பொருளாக விளங்குகின்றான். இதனை உபநிடதம் ''அணோரணியாந் மஹதோ மஹீயாநாத்மா'' என்று கூறுகின்றது.

அணுவுக்கு அணுவாகவும், மகத்துக்கு மகத்தாகவும் விளங்குபவன் இறைவன். ஒரு பழங்கதை ''பழம் கதை.''

திருக்கயிலாய மலையில் உமா தேவியாருடன் சிவபெருமான் வீற்றிருக்கின்றார். விநாயகப் பெருமானும், முருகப் பெருமானும் தாய் தந்தையரை வணங்கி வழிபடும் பொருட்டுச் சென்றார்கள்.

தினந்தோறும் பழங்காலத்தில் மைந்தர்கள் தந்தை தாயரை வழிபடுகின்ற வழக்கம் இருந்தது.

**''வைகறை யாமம் துயில்எழுந்து**
**தான்செய்யும்**
**நல்லறமும் ஒண்பொருளும் சிந்**
**தித்து வாய்வதின்**
**தந்தையுந் தாயும் தொழுதுஎழுக**
**என்பதே**
**முந்தையோர் கண்ட முறை''**

என்று ஆசாரக்கோவை கூறுகின்றது.

ஆனைமுகனும் ஆறுமுகனும் அம்மையப்பரை வலம் வந்து வணங்கினார்கள். சிவமூர்த்தியின் திருக்கரத்தில் ஒரு தெய்வ மாதுளங்கனி இருந்தது. அதனை இருவரும் கேட்டார்கள்.

அரனார், ''அகில உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வருபவருக்கு இக்கனி தரப்படும்'' என்று அருளிச் செய்தார்.

முருகப்பெருமான் மயிலின் மீது ஏறி அகில உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வந்தார்.

**''ஆகமம் விளைத்தகில லோகமும்**
**நொடிப்பொழுதில்**
**ஆசையொடு சுற்று மதிவேகக்**
**காரனும்''**
**''இலகுகனி கடலைபயறொடியல்**
**பொரி அமுதுசெயும்**
**இலகுவெகு கடவிகட தடபார**
**மேருவுடன்**
**இகலி முது திகிரிகிரி நெரியவளை**
**கடல்கதற**
**எழுபுவியை ஒருநொடியில் வலமாக**
**ஓடுவதும்.''**

— திருவகுப்பு.

''எல்லாம் சிவத்துக்குள் ஒடுக்கம்'' என்று சிந்தித்து ஆனைமுக அண்ணல் அம்மையப்பரை வலமாக வந்து கனி பெற்றார்.

இந்தப் பழங்கதை ஒரு பெரிய தத்துவத்தை உணர்த்துகின்றது!

1. தந்தைக்கு உபதேசித்த தயாபரனுக்குச் சிவத்துக்குள் எல்லாம் ஒடுக்கம் என்பது தெரியாதா? தெரியும்.

2. எல்லா உலகங்களையும் சருவ வல்லமையுடைய விநாயகரால் வலம் வர இயலாதா? இயலும்.

3. சிவபெருமான் இரு மைந்தர்களும் கனி கேட்டபோது உள்ள கனியை உடைத்துப் பகிர்ந்து தரக் கூடாதா?

4. அல்லது ஒரு புதிய கனியை உண்டாக்கித் தரக்கூடாதா? வீதியில் விளையாடுகின்றவன் கூட ஏதேதோ பொருள்களைத் தருவிக்கின்றானே.

5. ''தம்பிக்கே தந்துவிடுங்கள். எனக்கு வேண்டாம்'' என்று விட்டுக் கொடுக்கின்ற குணம் விநாயகரிடம் இல்லையா?

6. ''அப்பா! அண்ணாவுக்கே கொடுங்கள். நான் பிறகு வாங்கிக் கொள்ளுவேன்'' என்று ஒதுங்கிப் போகின்ற தியாக புத்தி வேலவன் பால் இல்லையா?

7. ஒரு சிறிய கனி காரணமாக உலகத்தை வலம் வந்தால் கூலி கட்டுமா?

8. பழம் காரணமாகத் திருக் கயிலாய மலையில் முருகனும் விநாயகரும் போட்டியிடலாமா?

9. பழத்தின் மீது ஞானமே வடிவாய விநாயகருக்கும், ஞானபண்டிதனுக்கும் அத்தனை ஆசையா?

இந்த வினாக்கள் அடுக்கடுக்காக எழுகின்றன. இத்தனை வினாக்களுக்கும் தக்க விடை பகர்கின்றேன்:-

இறைவனைப் பற்றி நாம் முன் என்ன சிந்தித்தோம்? ''எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் அவன் தங்கி இருக்கின்றான்'', ''அவனிடம் எல்லாம் தங்கியிருக்கின்றன'' என்று இருவிதமாக நினைத்தோம் அல்லவா?

சிவத்துக்குள்ளே எல்லாவற்றையும் பார்த்தார் கணபதி.

எல்லாவற்றுக்குள்ளும் சிவத்தைப் பார்த்தார் முருகர்.

இந்த அரிய பெரிய உண்மையை உணர்த்துகின்றது அப்பழங்கதை.

இதனைத் தாயுமானவர் கூறுகின்றார்:

**''அங்கிங்கெ னாதபடி எங்கும்**
**பிரகாசமாய்**
**ஆனந்த பூர்த்தியாகி**
**அருளொடு நிறைந்ததெது?**
**தன்னருள் வெளிக்குளே**
**அகிலாண்ட கோடி எல்லாம்**
**தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்**
**குயிராய்த்**
**தழைத்ததெது?''**

இனி, ''இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றானே உலக மாயை

(7ம் பக்கம் பார்க்க)

உ

# சக்தியை முன்னிட்ட சிவ வழிபாடு

— வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராமசாஸ்திரிகள் —

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் புரிந்தருளுகின்றார் எனச் சைவ சாஸ்திரங்கள் விளக்குகின்றன. அப்பரமேசுவரன் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி சொரூபமாக விளங்குகின்றார். அறிவும் இச்சையும் அவருள் மறைந்து நிற்கின்றன. கிரியாரூபமானசக்தி பிரபஞ்ச நலனைக் கருதி நான்கு வகையாகப் பிரிந்து இயங்குகின்றது. சகல ஜீவான்மாக்களுக்கும் போகபோக்கியங்களை அருளும் சக்தி உமையம்மையாகும். பிரபஞ்சத்தை நிலையான முறையில் இயக்குவிக்கும் சக்தி புருட வடிவத்தில் காட்சி அளிக்கும் விஷ்ணுவாகும். தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கி வளரும் நேரம் அதர்மத்தை அழித்து தர்மத்தை ஸ்தாபிக்கும் சக்தி காளியாகும். நல்லவர்கள் மறைந்து வாழத் தீயவர்கள் மேலோங்கி நிற்கும் போது போரை மூட்டித் தீயவர்களை அழித்து நல்லவர்களை வாழச் செய்யும் சக்தி துர்க்கையாகும். இதனை ஸ்மிருதிநூல் கூறுகின்றது.

"ஏகைவ சக்தி:பரமேசுவரஸ்ய
பிரயோஜனார்த்தாய சதுர்விதாபூத்
போகே பவானீ புருஷேச விஷ்ணு:
குரோதேச காளீ ஸமரேச, துர்கா"

இவ்வாறு சிவபெருமான் நான்குவகையான கிரியா சக்திகளினூடாகப் பிரபஞ்ச கிருத்தியங்களை நடாத்தி வருகின்றார்.

சிவசக்தியைப் பிரகிருதி புருஷன் என்று கூறுவர். பிரகிருதியை மாயை என்றும் புருஷனை மாயி என்றும் விளக்கம் கூறுவார்கள். மாயையைத் தன்னுள் அடக்கி, மாயி பிரபஞ்சம் முழுவதையும் வியாபித்து அருளுகின்றது என்று பிர்மவைவர்த்த புராணம் கூறுகின்றது.

"மாயாம்து பிரகிருதிம்வித்தி
மாயினம்து மகேசுவரம், தஸ்ய
அவயவ பூதைஸ்து வியாப்தம் ஸர்வமிதம் ஜகத்"

ஆகவே இதனால் சிவசக்தியின் ஒற்றுமைப்பாடு தெளிவாக அறியப்படுகின்றது. அந்தமாயாரூபியான சக்தியே சிவத்தின் திருவருளாகும். திருவருளுக்குப் பாத்திரமானவன் சிவ சாயுச்சிய பதவியைப் பெறுகின்றான். இதனை மணிவாசகப் பெருமான் "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்ற வசனத்தால் விளக்கிக் காட்டியுள்ளார். அப்பரமேசுவரனுடைய திருவருட் சக்தியாகிய உமையம்மையின் துணையால் சிவபதமுக்தியைச் சீவான்மாக்கள் அடைகின்றன என்பதே இதன் விளக்கமான கருத்து. இக்கருத்தைச் சங்கரபகவத் பாதாள் இராஜஇராஜேசுவரி அஷ்டகத்தின் பலசுருதியில் "அந்தி ஈச மோட்சப்ரதா" என்ற வாக்கியத்தால் தெளிவு படுத்தியிருக்கின்றார். அந்தி - பலபல பிறவிகளில் பலபல தேவர்களை வழிபட்டு அதன் புண்ணியவசத்தால் தேவியை வழிபடும் அடியார்களுக்கு அப்பிறப்பே முடிவாகி அப்பிறவியின் முடிவிலேயே, ஈசமோட்சப்ரதா - சிவபத முக்தியை அருளுபவள் பராசக்தி, என்பதே இவ்வாக்கியத்தின் தெளிவான கருத்தாகும். தேவியை வழிபடும் எண்ணம் கடைசிப்பிறப்பில்தான் உண்டாகும் என்று லலிதா ஸஹஸ்ரநாம பல சுருதியில் "சரமே ஜந்மனி" என்ற வாக்கியத்தால் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. சிவபெருமானின் திருவருள் கிடைத்துவிட்டது என்பதே அதன் கருத்தாகும். சக்தி வழிபாடு செய்து அன்னையின் அருளைத் துணை கொண்டு சீவான்மாக்கள் சிவமுக்தி பெறுகின்றன என்பதே சாஸ்திர முடிவான கருத்தாகும்.

பறவை மிருகம் முதலியன யாவும் பிறப்பெடுத்ததும் முதலில் தாயை உணர்ந்து கொள்ளுகின்றன. ஆனால் அவை தந்தையை உணர்ந்துகொள்ள மாட்டா. மனிதன் பிறவி எடுத்ததும் தாயை உணர்ந்து கொள்கிறான். பின் தாய் உணர்த்த தந்தையை உணர்ந்து கொள்ளுகிறான். ஆகவே, மானிடப்பிறவி மிக மேலானது. "ஜந்தூனாம் நரஜன்ம துர்லபமிதம்" பிறப்புக்களுள் மானிடப் பிறவி கிடைத்தற்கரிது என்பது சான்றோர் வாக்காகும். தோற்றத்தில் தோன்றிய முறைபோல முடிவிலும் அவ்வாறே அமைந்துள்ளது. "தோடுடைய செவியன்" என்ற தமிழ் மறையாம் ஆதி வாக்கும் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. இறைவி இம்மையில் சகல போக பாக்கியங்களைக் கொடுத்து முடிவில் குருவடிவமாகவந்து சிவ ஞானத்தை அருள்புரிந்து சிவசாயுச்சியத்தை அளிக்கின்றாள் என்பதே ஆகம சாஸ்திர முடிபாகும்.

"சிவஞானப்ரதாயின்யை நம:" என்று லலிதா ஸஹஸ்ர நாமத்தில் ஒரு அர்ச்சனையுள்ளது. சிவஞானத்தை அளிப்பவள் என்பதே அதன் கருத்தாகும்.

பேரின்பவாழ்வுக்கு அடிப்படையானது ஞானம். மகேசுவரனை உபாசித்து ஞானத்தைப் பெறவேண்டும். அதற்குரிய மந்திரம் பஞ்சாட்சர மாகும். அதனை உபதேசித்து விளக்குவது குருவின் வாக்காகும். இக்கருத்தைப் பின்வரும் பாட்டு விளக்குகின்றது.

"மோட்சஸ்ய மூலம் யத்ஞானம்
தஸ்ய மூலம் மகேசுவர:
தஸ்ய பஞ்சாட்சரோ மந்திர:
மந்திர மூலம் குரோர்வச:"

சிவத்தின் திருவருட்சக்தியே குருவாக வந்து உபதேசம் செய்கின்றது என்பது சைவசாஸ்திரக் கோட்பாடாகும்.

கவிச்சக்கரவர்த்தி காளிதாசன் தேவி ஸ்தோத்திரத்தில் இக்கருத்தை அழகாக எடுத்துக் கூறியிருக்கின்றார். "தயமான தீர்கநயனாம் தேசிகரூபேண தர்சிதாப்யுதயாம்". அன்னை பராசக்தி கருணை நிறைந்த நீண்ட கண்களையுடையவள். குருவடிவமாக வந்து எல்லா நன்மைகளையும் ஆன்மாக்களுக்கு அருளுபவள். வேதம், உபநிடதம், ஆகமம் இவைகள் தேவியின் பெருமையை வெகுவாகப் போற்றித் தேவி வழிபாட்டை முன்னிட்டுச் சிவவழிபாட்டை விளக்குகின்றன.

## வேதம்

இருக்கு வேதம் பத்தாம் மண்டலம் 125 ஆம் சூக்தம்.

1. "அஹம் ராஷ்ட்ரீஸங்கமனீ
வஸூநாம்,
சிகுதுஷீ பிரதமாயக்ஞியா நாம்
தாம்மா தேவா வியதது:
புருத்திரா
பூரிஸ்தாத் திராம் பூரி
ஆவேசயந்தீம்.

(6ம் பக்கம் பார்க்க)

உ

# சைவபரிபாலன சபை
## தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் - 13

(புத்தகம் 112, இதழ் 5 இன் தொடர்ச்சி)

### சைவப்பிரசங்கம்:

1893 ஆம் ஆண்டிலும் சைவப் பிரசங்கம் கிரமமாக நடைபெற்றது. ஸ்ரீ. சு. ஏரம்பையரே தொடர்ந்தும் சபையின் பிரசாரகராகக் கடமையாற்றினார். இவ்வாண்டில் நூற்றிமுப்பத்தொன்பது பிரசங்கங்கள் செய்யப்பட்டன. சிவ. சதாசிவக்குருக்கள், அ. குமாரசுவாமிப்பிள்ளை, நொத்தாரிசு இ. வைத்தியலிங்கபிள்ளை, சு. சரவணமுத்துப்பிள்ளை, ச. வைத்தியலிங்கபிள்ளை, நொத்தாரிசு ஆறுமுகம்பிள்ளை, வேங்கடாசல ஐயர், வெ. மயில்வாகன வைத்தியர், த. கைலாசபிள்ளை முதலானவர்களும் ஆங்காங்கே பிரசங்கம் செய்தார்கள். சிறைக்கைதிகளுக்கான பிரசங்கமும் கிரமமாக நடைபெற்றது

### இந்து உயர்நிலைப் பாடசாலை:

இவ்வாண்டு (1893) இந்து உயர்நிலைப் பாடசாலை மாணவர்களைத் தேர்வு செய்ய கல்கத்தா பல்கலைக் கழகத்தினர் உடன்பட்டார்கள். கல்கத்தா பல்கலைக்கழகப் பிரவேச பரீட்சை வகுப்பில் முப்பது மாணவர்கள் கல்வி கற்றார்கள். எல்லா வகுப்புகளிலும் தமிழ் கற்பிக்கப்பட்டது. 1893 தை மாதமுதல் கண்ணநாயர் என்னுமோர் ஆசிரியரை இந்தியாவிலிருந்து வருவித்துக் கற்பித்தனர். இவ்வருடத்தில் கண்ணநாயர் உட்பட பத்து ஆசிரியர்கள் சேவையாற்றினர்.

31-07-1893 இல் இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களின் எண்ணிக்கை 292. இவ்வருடத்தில் ஐந்து மாணவர்கள் கல்கத்தா பிரவேச பரீட்சைக்குத் தோற்றினார்கள். ஒருவர் உடல்நலமின்மையால் ஒரு தேர்வுக்கு போகவில்லை. இவரும் இன்னொருவரும் பரீட்சையில் தேறவில்லை. P. சின்னப்பாஐயர், S. வைத்தியலிங்கம், S. சிவபாதசுந்தரம் ஆகிய மூவர் சித்தியடைந்தனர்.

### இந்துசாதனம்

இந்துசாதனம் பத்திரிகை சந்தாதொகை முன்னைய வருடத்தை விட அதிகரிக்கவில்லையெனினும் குறையவில்லை. எழுதிக் கேட்டுக்கொண்ட சைவப்பள்ளிக் கூட ஆசிரியர்களதும் மாணவர்களதும் உபயோகத்திற்காக விலை வாங்காது ஒவ்வொரு பத்திரிகை கொடுக்கப்பட்டது.

### பாலபாடங்கள்

சைவப் பள்ளிக் கூடங்களுடைய உபயோகத்திற்காகத் தமிழில் பாலபாடம் இரண்டாம் புத்தகமும் ஐந்தாம் புத்தகமும் இவ்வருடம் முதன் முறையாக இயற்றுவித்து அச்சிடப்பட்டன. பாடப் புத்தகங்கள் அச்சிடும் முயற்சி இவ்வருடம் தான் முதலில் தொடங்கப்பட்டது.

### வரவு - செலவு

இவ்வாண்டில் நன்கொடை வரவு ரூபா 1216, மாணவர் சம்பளவரவு 2163-31½, சைவப்பிரகாச அச்சியந்திரசாலை வரவு 1259 - 23¾ உட்பட மொத்த வரவு ரூபா 5665 - 47 முக்கிய செலவுகள் - பிரசாரகர் வேதனம் ரூபா 150/- கட்டடச் செலவு ரூபா 1524, ஆசிரியர்கள் வேதனம் ரூபா 2167 - 53 மேசை, வாங்கு, புத்தகங்கள், பரிசுப் புத்தகங்கள் வாங்கியது ரூபா 209 - 28½;

### திருக்கேதீச்சர நிலம் விற்பனவு:

இலங்கையில் தேவாரம் பெற்ற ஸ்தலங்களுள் ஒன்றாகிய திருக்கேதீச்சரம் கடலாலும் பகைவராலும் அழிந்து மண்மூடிய நிலையில், கி. பி பதினாறாம் நூற்றாண்டின் பின் ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள், அதன் திருப்பெயரையே இலங்கைவாழ் சைவமக்களும் பிறரும் மறந்திருந்தவொரு இருண்டகாலமாகவிருந்தது. ஆலயம் அழிந்து போனபடியால், அவ்வாலயம் அமைந்திருந்த நிலம் அரசினருக்கானது. அந்த நிலம் எதுவென்பதை திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், சுந்தரமூர்த்திநாயனார் தேவாரங்களிலிருந்து யூகித்து அறிந்து சொன்னவர் நாவலர் பெருமான். அந்த நிலத்தைத் திரும்ப அரசினரிடமிருந்து வாங்கி அதிலே அக்கோவிலை முன்போலக் கட்ட வேண்டும் என்பது நாவலர் பெருமானின் தணியாத தாகமாகவிருந்தது. முடிக்குரிய காணியாகிவிட்ட கோவில் நிலத்தை விலைக்குத் தருமாறு கேட்டு நாவலர் அரசிடம் விண்ணப்பித்தார். ஆனால் அச்சமயம் வடமாகாண அரசாங்க அதிபராக இருந்த திரு. துவைனம் அவர்கள் அந்நிலத்தை விற்பதை சிபார்சு செய்யவில்லை.

ஆகவே நாவலர் பெருமான் ஆங்கிரச வருடம் ஐப்பசி மாதம் (1872) எழுதி வெளியிட்ட "யாழ்ப்பாணச் சமய நிலை" என்ற நூலில் சைவ மக்களுக்கு பின்வருமாறு வேண்டுகோள் விடுத்தார்.

"சைவசமயிகளே! இன்னும் ஒன்று சொல்லி முடிப்போம். தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருகோணமலைக்குச் சம்பந்தமூர்த்திநாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத்திருக்கேதீச்சரம் இவ்வடமாகாணத்திலுள்ள மன்னாருக்கு அதிசமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே. புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோவில்கள் கட்டப்படுகின்றனவே. நீங்கள் இந்த மகாஸ்தலத்தைச் சிறிதும் நினையாததென்னையோ? இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிதுசிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்துவிடும்! இதை நீங்கள் எல்லாருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின், அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வர்."

நாவலர் பெருமான் சிவபதமடைந்த பதினான்கு வருடங்களின் பின் திருக்கேதீச்சர ஆலயம் முன்னர் அமைந்திருந்து பின்னர் மணல்மேடும் காடுமாகக் கிடந்த நாற்பது ஏக்கர் காணியை அரசிடம் இலவசமாகப் பெறும் முயற்சிகள் தீவிரமடைந்தன. யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரும் கொழும்பு நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களும் அக்கறையுடன் செயற்பட்டனர்.

(அடுத்த இதழில் தொடரும்)

# சக்தியை முன்னிட்ட சிவ வழிபாடு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

**2. ''மயா ஸோன்ன மத்தியோ விபச்யதி**
**ய: பிராணிதியஈம் சுருணோதி உக்தம்**
**அமந்தவ: மாம்தே உபக்ஷியந்தி சுருதி**
**சுருத சிரத்திவம் தேவதாமி''**

(அஹம்) என் உள்ளத்தில் கலந்து நிற்கும் பராசக்தி (சிகிதுஷீ) சிவப் பிரம்மத்தை அறிந்திருப்பவள். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், ஸதாசிவன், நாதம், பிந்து, சக்தி, சிவம் என்ற ஒன்பது தத்துவங்களுள் சக்திதத்துவம் சிவதத்துவத்தின் அருகில் இருத்தலால் என்றும் சிவபிரம மத்தை அறிந்திருப்பவள் என்பதே இதன் விளக்கமாகும். (யக்ஞியாநாம் பிரதமா) வேள்விக்குரிய பொருள்களுள் முதற் பொருளாக விளங்குபவள். வேள்வி செய்ய விரும்பும் ஒருவர் அதற்குரிய பொருள்களைச் சேகரிக்க வேண்டும். இல்லாளுடன் இல்லற தர்மம் நடத்துபவர் வேள்வி செய்ய வேண்டும் என்று வேதம் விதித்துள்ளது. ஆகவே, வேள்விக்குரிய பொருள்களுள் இல்லாள் முதன்மை ஸ்தானம் பெற்றவளாகின்றாள். சிவபெருமானுக்குரிய நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், எஜமானன் என்ற எட்டு மூர்த்தங்களுள் எஜமான மூர்த்தம் ஒன்றாகும். அந்த எஜமான மூர்த்தமாகிய சிவத்திற்கு சக்தி முதற் பொருளாக விளங்குகின்றாள். (பூரிஸ் தாத்திராம்) பிரபஞ்ச'வடிவமாக எங்கும் விளங்குபவளும் (பூரிஆவேச யந்தீம்) சகல ஜீவராசிகளை வாழச் செய்பவளும் (மாம்) சிவபாவனையில் விளங்கும் சீவனோடு கலந்துநிற்பவளுமாகிய அந்தப்பராசக்தியை (தேவா; புருத்திரா வியதது!) தேவர்கள் முன்னதாகவே அறிந்துள்ளனர். (ய:விபச்யதி) எந்த சிவசொரூபம் யாவையும் காண்கின்றதோ (ய: ப்ராணிதி) எந்த சிவசொரூபம் மூச்சு விடுகின்றதோ, (நான்கு வேதங்களும் புராணங்களும் இதிகாசங்களும் உபநிடதங்களும் சிவபெருமானின் மூச்சுக்காற்றுக்கள் என்று பிரகதாரண்யக உபநிடதம் விரித்துக்கூறுவதை வேதம் சுருக்கிக் கூறியிருக்கின்றது). (ய: உக்தம் கருணோதி) எந்த சிவசொரூபம் எனது தோத்திரத்தை ஆதரவுடன் கேட்கின்றதோ (ஸ: மயா அன்னம் அத்தி) அந்த சிவசொரூபம் சக்தியோடு கலந்து என் உள்ளத்தில் நின்று சகல அனுபவங்களையும் அனுபவிக்கின்றது. (மாம்) சிவத்துடன் கலந்து என் உள்ளத்தில் உறைந்துநிற்கும் சக்தியை (அமந்தவ : தே) அறிந்துகொள்ளாத ஜீவான்மாக்கள் (உபக்ஷியந்தி) துயரக் கடலில் மூழ்கின்றன. (சுருத) புகழ் பெற்ற ஜீவான்மாவே (சுருதி) நான் சொல்வதைக்கேள்! (சிரத்திவம்) அந்த சிவபிரம்மஸ்வரூபத்தை சிரத்தையின் மூலமாகத்தான் அறியமுடியும். பிரணவத்திற்கு சிரத்தை, மேதை என இரு சக்திகள் உண்டு. சிரத்தாரூபமான சத்தியினூடாக பிரணவரூபமான சிவஸ்வரூபத்தை அறியமுடியும் என்பதே இதன் விளக்கமாகும். (தேவதாமி) உனக்கு இதனை எடுத்துக் கூறுகிறேன். இவ்விருபாட்டுக்களும் சக்தியின் பெருமையை விளக்கி சக்தி வழிபாட்டின் சிறப்பையும் விளக்கியுள்ளன.

### யசுர்வேதம்

யசுர்வேதத்தில் தேவியைப் போற்றும் மந்திரப் பகுதிகளுள் இரண்டு மிகப்பிரசித்திவாய்ந்தவை. ஒன்று ஸ்ரீ ஸூக்தம், மற்றது துர்க்காஸூக்தம். ஸ்ரீ ஸூக்தத்தில் முதலாவது மந்திரம் ''ஹிரஜண்ய வர்ணாம் ஹரிணீம் ஸுவர்ணரஜதஸ் ரஜாம் சந்திராம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம் ஜாதவேதோம ஆவஹ''. பொன் நிறம் வாய்ந்தவளும் சகல பாவங்களை நீக்குபவளும் பொன் மாலையும் வெள்ளிமாலையும் அணிந்திருப்பவளும் சந்திரன்போல் மகிழ்ச்சி தருபவளும் மக்களுக்கு ஏராளமான செல்வத்தை வைத்திருப்பவளுமான மகாலட்சுமியை ஓ! அக்நிபகவானே என்னுடைய நன்மையின் பொருட்டு அழைத்துவாரும். இது வெளிப்படையான கருத்து. பிறவியெடுத்த சீவான்மாக்கள் யாவையும் அறியும் ஞான ரூபியான பேரொளியே! பொன்மேனியனுடன் இரண்டறக்கலந்து நின்று பிரித்தறிய முடியாத பொன்மேனி பெற்றவளும் மும்மலங்களை நீக்குபவளும் சத்துவகுணமும் திருவருளும் நிறைந்தவளும் அடியவர்களுக்கு அருள்செய்ய மலர்ந்தமுகம் பொருந்தியவளும் சகல போகச்செல்வங்களை அளிப்பவளும் ஆகிய அன்னை திருவருட்சக்தியை எனது ஆன்ம ஈடேற்றத்திற்காகத் தாங்கி வருவீராக. இது மறைபொருளாகும். திருவருட்சக்தியை முன்னதாக வழிபட்டு சிவப்பிரம்மத்தை அன்னையின் அருளால் அறிந்து பின் வழிபடல் வேண்டும் என்ற கருத்தை இம்மந்திரம் அழகாக விளங்குகின்றது.

தேவியைப்போற்றும் மற்றொரு மந்திரபாகம் துர்காசூக்தமாகும். இதில் ஆறுமந்திரங்கள் உள்ளன. இரண்டாவது மந்திரம் தேவியைப் போற்றுகின்றது

**''தாமக்நிவர்ணாம் தபஸா ஜ்வலந்தீம்**
**வைரோச நீம் கர்மபலேஷு ஜுஷ்டாம**
**துர்காம் தேவீம் சரணமஹம் ப்ரபத்யே**
**ஸுதர ஸிதர ஸே நம''**

மின்னலொளி பொருந்தியவளும் சிவதத்துவத்திற்கு அருகில் நின்று ஒளியுடன் பிரகாசிப்பவளும் பேரொளி வாய்ந்த சிவத்தில் கலந்து நிற்பவளும் சீவான்மாக்களுக்குக் கர்மபலனை அளிப்பதற்காகச் சிவனைச் சேவித்து வருபவளும். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியுடன் உள்ளத்தில் ஆராதிக்கப்படுபவளும், சுயம் பிரகாசம் உடையவளுமான அன்னையை தஞ்சமென அடைகின்றேன். சகல ஆன்மாக்களுக்கும் போகபோக்கியங்களை அளித்து முடிவில் பிறவிக் கடலைத் தாண்டுவிப்பவளே; நானும் அவ்வாறு தாண்டுவதற்காக உனக்கு வணக்கம்''

ஏனைய ஐந்து மந்திரங்களும் சிவபரமாக அமைந்துள்ளன. இருந்தும் துர்காசூக்தம் என்று தேவியின் பெயரால் அழைக்கப்படுகின்றது. சிவமும் சக்தியும் அபின்னமானவையாதலால் தேவிபாவனையை முன்னிட்டுச் சிவவழிபாடு செய்கின்றேன் என்பதே இதன் உட்பொருளாகும்.

### உபநிடதம்:

ஒரு சமயம் தேவரும் அசுரரும் கடும்போர் புரிந்தனர். இறைவனருளால் தேவர் வெற்றி பெற்றனர். மக்கள் தேவர்களைப் போற்றினர். இவ்வெற்றிக்குக் காரணம் தாங்களே என்று தேவர்கள் கூறத்தொடங்கினர். அவ்வமயம் தொலைவில் பேரொளியொன்று தோன்றியதைக் கண்டனர். தங்களை அழிக்கவந்த ஒரு இயக்கனோவென்று கண்டு அஞ்சினர். தேவர்தலைவனாகிய இந்திரன்

(11ம் பக்கம் பார்க்க)

# சிவநெறி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அவனைப் பற்றாதோ என்ற **வினா** எழும்.

உப்பு இருக்கும் இடம் கடல், **உவர்** நீரில் பிறந்து, உவர் நீரைப் பருகி, உவர்நீரில் வாழ்கின்ற மீனுக்கு உவர் ஏறுவதில்லை. மீன் உண்போர் கடல் மீனுக்கும் உப்பிட்டுத்தான் சமைத்து உண்பார்கள். அதுபோல் இறைவன் யாண்டும் உறைந்திடினும் உலக மாயை அவனைப் பற்றாதென உணர்க.

எங்கும் நிறைந்த பொருள் இறைவன் என்றால், ஏன் அது நம் கண்ணுக்குத் தெரியவில்லை என்பாரும் உளர். விறகிலே நெருப்பு இருக்கின்றது. பாலில் நெய் இருக்கின்றது. ஆனால் அவை கண்ணுக்குத் தெரிகின்றனவா? இல்லை. விறகிலே தீயும், பாலில் நெய்யும், கண்ணுக்குத் தெரியாமையால், இல்லையென்றால் நமக்கு அறிவு இல்லை என்று உலகம் சிரிக்காதா?

விறகைக் கடைந்தால் தீ வெளிப்படும். பாலைக் கடைந்தால் நெய் வெளிப்படும். அதுபோல, தியானம் புரிந்தால் இறைவன் வெளிப்பட்டுக் காட்சி தருவான். சாதனைகள் செய்தால் தேவரும் மூவரும் காணமாட்டாத சிவம் தானே வந்து வெளிப்பட்டுத் தோன்றும்.

**''விட்டேன் உலகம் விரும்பேன்**
**இருவினை வீணருடன்**
**கிட்டேன் அவருரை கேட்டுமி**
**ரேன்மெய் கெடாதநிலை**
**தொட்டேன் சுகதுக்கம் அற்றுவிட்**
**டேன்தொல்லை நான்மறைக்கும்**
**எட்டேன் எனும்பரம் என்னிடத்**
**தேவந்துஇங் கெய்தியதே''**

என்கின்றார் பட்டினத்தடிகளார்.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியும், மற்றவர் அறியா மாணிக்கமலையும் ஆகிய இறைவன் சொரூப நிலையில் 'சிவம்' என்றும், உலகை நோக்கிய தடஸ்த நிலையில் 'பதி' யென்றும் பேர் பெறுகின்றான்.

இறைவனைப் பற்றியும், உயிர்களின் தன்மைகளைப் பற்றியும் உயிரின் இயற்கைக் குற்றமாகிய ஆணவத்தைப்பற்றியும், சைவ சித்தாந்த நூல்கள் தெளிவாகக் கூறுகின்றன ஏனைய நூல்களில் ஆணவத்தின் பேர்தானும் கூறுமாறில்லை.

அத்வைதம்: — அத்வைதம் என்ற சொல்லுக்குப் பலர் பலவாறு பொருள் கண்டார்கள். திருவருள் துணை செய்யாமையால் மற்ற மதாசிரியர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கூறிக் குழப்பஞ் செய்தார்கள்.

''ஏகம் ஏவாத்விதீயம்'' என்பது வேதவாக்கு. இதன் பொருள் ''ஒன்றேதான் பொருள். இரண்டாவதில்லை'' என்பது இதை வைத்துக் கொண்டு சங்கரர் முதலியோர், பிரமத்தை யன்றி வேறு பொருள் இல்லையென்று முடிவு கட்டிவிட்டார்கள்.

பிரம்மத்தைத் தவிர வேறு பொருளே இல்லையானால், இதனை யார் யாருக்குக் கூறுவது? இந்த வார்த்தையினால், சொல்பவன் ஒருவன், கேட்பவன்ஒருவன் இருக்க வேண்டும் அன்றோ? பிரமமே மயங்குகின்றதா? பிரம்மத்தைத் தவிர வேறு பொருள் இருந்தால்தானே இந்த வசனம் உண்டாகும்?

பிரம்மத்தைத் தவிரத் தலைமைப் பொருள் வேறு இல்லையென்பதே இந்த வேத வசனத்தின் உட்பொருள்.

ந-த்வைதம் என்ற சொற்கள் சேர்ந்து அத்வைதம் என்றாயின. ந என்ற சொல்லுக்கு ''சப்த கல்பத்ருமம்'' என்ற நூல் ஆறு பொருள்கள் கூறியுள்ளது. அவற்றுள் மூன்று: அன்மை, இன்மை, மறுதலை என்பனவாம். இன்மை யென்ற பொருளில், அப்பிரகாசம் எனக்கொண்டு ஒன்றேதான் என்றார் சங்கரர். மறுதலைப் பொருளில், அநீதி, அதர்மம் எனக் கொண்டு, இரு பொருள்கள் என்றார் மத்வர். மெய்கண்டார் அப் பிராமணன், தருமம் கெட்டவன் என்று அண்மைப் பொருளில் கூறியருளினார். பொன்னும் பணியும் போல் உலகமும் இறைவனும் ஒன்றே என அபேதவாதங் கூறினார் சங்கரர். இதில் ஆபரணத்திற்கு வரும் குறைபாடுகள் யாவும் பொன்னுக்கும் வரும். ஆதலால் இது பொருந்தாதென உணர்க.

இறைவனும் உலகமும் ஒளியும் இருளும் போல் வேறு வேறே என்றனர் மத்வர். இது பேதவாதம். இருளும் ஒளியும் பகைப்பொருள். ஆதலால் உலகமும் இறைவனும் தொடர்பில்லாமல் போவதால் இது பொருந்தாமையறிக.

பஞ்சராத்திரிகள், சொல்லும் பொருளும் போல் பேதாபேதம் என்பர். சொல்லும் பொருளும் வேறேயாதலால், இவர் கூற்றும் பொருந்துமாறில்லை.

சிவாத்துவித சைவர்களும் மரமும் கிளையும் போல என, பேதாபேதமே கூறுவர். அபேதவாதம், பேதவாதம், பேதாபேதவாதம் என்ற மூன்றுமே பொருந்தா என்றால், உலகத்துக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்புதான் எவ்வகைப்பட்டது?

மேலே கூறிய மூன்றனுள் ஒன்றையே கூறாது, மூன்று தன்மைகளும் தன்னுள் காணப்படும் அத்வைதத் தொடர்பே உலகிற்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு என்கிறார் மெய்கண்ட சிவம்.

எண்ணுப் பெயர்முன் நகரம் அண்மைப் பொருளிலேயே வரும்.

நஏகம், அநேகம் என்பது போல நத்வைதம் அத்வைதம் என வந்தது.

அத்வைதம் என்பது இரண்டல்லாமை, பிரிவின்மை எனஉணர்க. பிரிவின்மை என்றதனால் பொருள் இரண்டுதான்; இரண்டாயினும் வேறு வேறாய் நில்லாது ஒன்றியே நிற்கும் என்பது கருத்து.

இறைவன் உலகத்தோடு கலப்பினால் ஒன்றாகியும் பொருள்தன்மையால் வேறாகியும், உலகத்திற்கு உதவும் பொருட்டு உடனாகியும் நிற்கின்றான்

இறைவன், உலகு உயிர்களோடு உடலும் உயிரும் போல் ஒன்றாகியும், கண்ணொளியும் கதிரொளியும் போல் வேறாகியும், கண்ணொளியும் உயிரறிவும் போல் உடனாகியும் நின்று அருள் புரிவன்.

இந்த நுணுக்கமான கருத்துக்களை மெய்கண்டார் சுருங்கிய சொற்களால், ''அவையே தானேயாய்'' என்று கூறியுணர்த்துகின்றார்.

அவையேயாய் - உயிரும் உடலும் போல் ஒன்றாகியும், தானேயாய்-

(10ம் பக்கம் பார்க்க)

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

**இந்துசாதனம்**

விஷு ஆண்டு புரட்டாதி மீ 16 உ (02-10-2001)

# யாழ்ப்பாணத்திலொரு தரமான சைவ உணவகம்

சைவ உணவு சீவகாருண்யம் மிக்கது, மனித உடலமைப்புக்கு ஏற்றது, இன்று உலகில் பொதுவாகக் காணப்படும் நோய்களிற் பலவற்றிற்கும் மனிதர் உள்ளாகக் கூடிய நிகழ் தகவைக் குறைக்கக் கூடியது என்ற பல்வேறு காரணங்களுக்காக உலகின் பல்வேறு நாடுகளில் - சிறப்பாக ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் - சைவ உணவுக்கோட்பாடு மிக வேகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக இளஞ் சந்ததியினரே சைவ உணவுக் கோட்பாட்டைக் கைக்கொள்ள ஆரம்பித்துள்ளனர். இந்நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இவற்றைத் தெட்டத்தெளிவாகக் காட்டுகின்றன. இதற்கான முக்கிய காரணம் இந்நாடுகளில் வெளியாகும் உடல்நல, மருத்துவ மற்றும் சஞ்சிகைகள் - புள்ளி விபரங்களுடன் - புலாலுண்ணுதலால் ஏற்படும் தீய விளைவுகளை எடுத்துக் காட்டுவதும் - இவற்றை அங்குள்ள இளஞ் சந்ததியினர் வாசித்து உணர்ந்து கொள்வதுவுமே யாகும். இந்நாடுகளில் இயங்கி வரும் சைவ உணவாளர் சங்கங்கள் உண்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறிப் பிரசாரம் செய்வதில் முன்னிலை வகிக்கின்றன.

சில மாதங்களுக்கு முன் வெளிவந்த இந்துசாதனமொன்றில் சைவ உணவின் சிறப்பையும் புலாலுண்ணுதலால் ஏற்படும் தீய விளைவுகளையும் பற்றி துலாம்பரமாக எடுத்துக் காட்டும் பல கட்டுரைகள் வெளிவந்திருந்தன. அக்கட்டுரையொன்றில் நூறு வருடங்களுக்கு முன்னர் மகாத்மா காந்தி அவர்கள் முதன் முதலாக இங்கிலாந்து சென்றிருந்த போது பல வாரங்களாக சைவ உணவகமொன்றைத் தேடி அலைந்ததையும் அதுவரை ரொட்டித் (பாண்) துண்டுகளுடன் பசிபோக்கியதையும், பல வார அலைச்சலின் பின் கண்டு பிடித்த சைவ உணவகத்தில் வைக்கப் பட்டிருந்த நூல்கள், ''எனது பெற்றோர் சைவச் சாப்பாட்டுக்காரர். நானும் அப்படியே'' என்றிருந்த காந்தியை ''கோட்பாடு காரணமாகச் சைவ உணவு உண்பவன்'' என்ற அந்தஸ்திற்கு மாற்றின. இன்று இலண்டனுக்குச் சென்றால் நூற்றுக்கணக்கான சைவ உணவகங்களைக் (இந்தியரும் இலங்கையரும் நடத்துவனவல்ல- ஆங்கிலேயர் நடத்துவன) காணலாம். அங்கு வெகு சிறப்பாக தொழில் நடப்பதையும் காணலாம். அவர்களது உணவுப் பட்டியலில் (Menu) பல்வேறு வகையான சைவ உணவு வகைகளைக் காணலாம்.

அதிக தூரம் செல்ல வேண்டியதில்லை. தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களிலெல்லாம் தரம் வாய்ந்த பல சைவ உணவு விடுதிகள் உள்ளன. அங்கு வழமைச் சாப்பாடுகளான சோறு, இட்லி, தோசை, சப்பாத்தி, பூரி மாத்திரமல்லாது பல்வேறு வகையான தரமான சைவ உணவுகளை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. ''சரவணபவன்'' போன்ற பெரும் சங்கிலித்தொடர் உணவு விடுதிகளில் வாடிக்கையாளர் காத்து நின்று உணவருந்திச் செல்வதைக் காணலாம். காரணம் அங்கு கிடைக்கும் தரமானதும் வெவ்வேறு வகையானதுமான உணவே.

வெவ்வேறு வகையான தரமான உணவு கிடைப்பதால் பெருமளவு மக்கள் - பணவசதி குறைந்தவர்கள் கூட - ஒரு மாற்றத்துக்காக - அடிக்கடி குடும்பத்துடன் இவ்வுணவு விடுதிகளுக்குச் சென்று உணவருந்தும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் நிலை? ஒரே விதமான (நான்கு ஐந்து வகை) உணவைப் பரிமாறும் - தரத்திலும் சுகாதாரத்திலும் குறைந்த - சைவ உணவகங்களே பசிபோக்கச் சாப்பிட வேண்டுமே என்ற கட்டாயத்தினால் வருபவர்களின் தேவைகளைக் கவனிக்கின்றன.

- குடும்பத்துடன் சென்று மன ஆறுதலுடன் உணவருந்தக்கூடிய
- வீட்டில் உணவு தயாரிக்க முடியாதவொரு சூழ்நிலையில் சென்று உணவருந்தக்கூடிய
- வீடுகளிலும் பொது இடங்களிலும் நடைபெறும் நல்ல நிகழ்வுகள், விசேட வைபவங்களின் போது சில வகையான உணவுகளை முன்னேற்பாட்டின் பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய
- வெளியூர், வெளிநாடுகளிலிருந்து வருபவர்களை அழைத்துச் சென்று விருந்து வைக்கக் கூடிய
- வெளியூர், வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் தங்கியிருந்து உணவருந்தக்கூடிய

சைவ உணவகம் ஒன்று தானும் உள்ளதா? இல்லை.

யாழ்ப்பாணத்தில் இலாபகரமாக இவ்வாறானதொரு சைவ உணவகத்தை நடத்த முடியாது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. பலவகையான - தரமான - சுவையான - கௌரவமாக இருந்து உணவருந்தக் கூடிய சைவ உணவகம் ஒன்றிருத்தால், அதனை எமது மக்கள் ஆதரிப்பர் என்பதில் ஐயமில்லை.

மேலை நாடுகளில் சைவ உணவுக்கோட்பாடு துரித வளர்ச்சியடைவதற்கு காரணங்கள் இரண்டு:

1. சைவ உணவின் மேன்மை பற்றியும் புலாலுணவின் கேடு பற்றியும் நடைபெறும் பிரசாரம்.
2. பலவகையான - சுவையான - தரமான சைவ உணவுகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளமை.

இந்த இரண்டையும் செய்யாது, சோற்றுக்கடையும் தோசைக்கடையும் இடியப்பக் கடையும் வைத்துக் கொண்டு, இளஞ்சந்ததியினருக்கு அறிவு பூர்வ விளக்கமளிக்காது, கொல்களத்தை மூடு, உரிமம் கொடாதே எனக் கோஷமெழுப்புவது எதுவித பலனையும் தரப்போவதில்லை, சைவ உணவைப் பரப்புவதில் - பசுவதையை இல்லாதொழிப்பதில் - அக்கறையுள்ளவர்கள் மேற்கூறியவற்றைக் கவனத்திற் கெடுக்க வேண்டும்.

புலாலை சாப்பிடுபவர் இல்லையானால் கொலை செய்வோரும் இல்லை என்ற வள்ளுவர் வாக்கை நினைவூட்டுகிறோம்.

சாப்பிடுபவர்களை வைத்துக்கொண்டு, கொல்லாதே எனக் கோஷமெழுப்புவது சீழ் உள்ள புண்ணிற்கு அதை அகற்றாது மருந்து கட்டுவது போன்றது. 'சீழை' அகற்ற ஒரே வழி பிரசாரமும் நல்ல - தரமான - சுவையான-பல வேறு வகையான உணவு பரிமாறும் சைவ உணவகங்களை உருவாக்குவதுமே.

உ

# நவராத்திரி

**— சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை —**

புரட்டாதி மாதத்திலே அமாவாசைக்குப்பின் வரும் ஒன்பது நாளும் (பிரதமை தொடங்கி நவமி முடியும் வரையுமுள்ள நாள்கள். சில ஆண்டுகளில் எட்டு நாளாகவும் சில வற்றில் பத்து நாளாகவும் வரும்) நவராத்திரி யெனப்படும். பூசை சிறப்பாக நடாத்தப்படுவது இராக்காலத்திலாதலால் இராத்திரியெனப்படும். (நவ=ஒன்பது; இந்த ஒன்பது நாள்களிலும் உமாதேவியாருக்கும், துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய சத்திகளுக்கும் விசேடபூசை நடைபெறும். உற்சவங்கள் நடப்பதுமுண்டு. துர்க்கை வீரத்தையும், இலட்சுமி செல்வத்தையும், சரஸ்வதி கல்வியையும் கொடுக்குஞ் சத்திகளாம்.

## பூசைமுறை:

மண்டபத்தின் நடுவிலே உமாதேவியாருக்கு ஒருகும்பமும், அதற்கு வடக்கே இலட்சுமிக்கொன்றும் அதற்குத் தெற்கேசரஸ்வதிக் கொன்றும் வைக்கப்படும். உமாதேவியாரது கும்பத்திலே துர்க்கைக்கும் பூசை செய்யப்படும். இந்த நான்கு தேவிகளுக்கும் ஒன்பது நாளும் பூசை நடைபெறும். ஒன்பதாம் நாள் மகிடாசுரனைத் துர்க்காதேவி கொன்ற பாவனை காட்டப்படும். நான்கு சக்திகளுக்கும் விஷேசபூசை செய்யப்படும். நவமியாதலால் மகாநவமியெனப்படும். நவமியில்முடியத்தக்கதாக ஏழு நாளாகவும் ஐந்து நாளாகவும் மூன்று நாளாகவும் ஒரு நாளாகவும் பூசை செய்வது முண்டு.

## மானம்பு:

இந்த நவமிக்கடுத்த நாள் மானம்பு என்றும் விசயதசமி யென்றும் சொல்லப்படும். மானம்பு என்பதற்குத் தலைவர் அம்புபோடும் நாள் என்று கருத்துக்கொள்வர், (மான் = பெரியவர்) அன்றைக்கு ஒவ்வொரு கோயிலிலுமுள்ள பிரதான மூர்த்தியை (சிவன் கோயிலிற் சிவபெருமான், சுப்பிரமணியர் கோயிலிற் சுப்பிரமணியர் .. ..) பூசித்துக் கோயிலுக்கு வெளியே அம்புபோடும் இடத்துக்கெழுந்தருளச் செய்வர். கடவுள் அம்பு போட்டுக்கொல்லுவது அசுரனையே. அசுரன் எனப்பட்டது ஆன்மாக்களை வருத்தும் மலமாம். ஒரு வன்னிமரத்தை நட்டு அதை அந்த அசுரனாகப்பாவித்து அந்த மரத்திலே அம்பு போட்டு அதைத் துணிக்கும் பாவனை காட்டப்படும். வன்னிமரம் அரிதாதலால் ஒரு வன்னி மரக்கொப்பை வாழையிலே பதித்துத் துணிப்பதுமுண்டு. சகல ஆன்மாக்களும் சுகமடைதற்காக இது செய்யப்படுவது. ஒன்பது நாளும் சிவசத்திகளுக்குச் செய்த பூசையின் பலனால் அடுத்த நாள் எந்தக்காரியமுங் கைகூடுமாதலால் அந்நாளுக்கு விசயநசமி யென்று பெயர். (விசயம்=வெற்றி) அன்றைக்குப் படிப்புத் தொடங்குவது நன்று.

மகிடாசுரனது கதை அருணாசல புராணந்திலுள்ளது. அது பின்வருமாறு:

மகிடன் (எருமை முகத்தை யுடையவன்) என்ற ஓர் அசுரன் இருந்தான். அவன் யாவரிலும் மிக்க பலசாலி, நஞ்சிலுங் கொடியவன். தேவேந்திரன் முதலிய தேவர்களை அடக்கி அவர்களுக்குங் கொடுமை செய்தவன். ஒரு நாள் அவனுடைய உணவுக்காக மிருகங்களைத் தேடி வேட்டையாடுதற்கு, ஆயிரம் ஏவற்காரர் காட்டுக்குப் போனார்கள். காட்டிலிருந்த தேவர்கள் அவர்களைக் கொன்று விட்டார்கள். இதை மகிடனுடைய தூதர்கள் அவனுக்குத் தெரிவித்தார்கள், அதைக் கேட்ட அவனுடைய படைத் தலைவன் சேனைகளோடு போருக்குப் போய்த் தோல்வியடைந்து இறந்தான். மகிடன் இதையறிந்து கோபங்கொண்டு தன் படைகளோடு காட்டுக்குப் போனான். உமாதேவியாருடைய கட்டளைப்படி துர்க்காதேவி அவனைக் கொல்லப் போயினள். துர்க்கை சக்கராயுதத்தினாலே தலையை அறுக்க அவன் யானையானான். யானை அழிக்கப் படக் குதிரையானான். பின்பு நெருப்பானான். இப்படியே அவன் பலவித உருவங்களைக் கொண்டான். ஈற்றிற் பழையபடி எருமைத்தலையோடு தோன்றினான். அப்போது துர்க்கையம்மை அவனைக் கொன்று அவனுடைய தலையைத் திருவடியால் மிதித்தனள். அதன் பின் வேறு உருவங்கொள்ளாது நற்கதியடைந்தான்.

இது மலத்தினால் அறிவு கெட்ட ஆன்மா கடவுளை மதியாது நடத்தலையும் மலத்தின் சத்திகள் ஒவ்வொன்றுங் கெடக் கெட வேறொன்று தோன்றி ஆன்மாவினின்று முளைத்தலையும் ஈற்றிலே யாவுங் கெட்ட பின் சிவசத்தியின் திருவடியாகிய மெய்ஞ்ஞானத்தைப் பெறுதலையும் குறிப்பது போலும்.

# தரமான சைவ உணவகம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை சைவ உணவாளர் சங்கத்தின் இணைய தளம் உள்ளது. இந்த இணைய தளத்தின் பக்கங்களிலேயே சைவ உணவாளரான உல்லாசப் பயணிகளுக்கு இலங்கையில் உள்ள உணவு வசதிகள் குறித்த விபரங்கள் சேர்க்கப்படவுள்ளது. உலகிலுள்ள சகல சைவ உணவாளர் சங்கங்களின் இணைய தளங்களும் சர்வதேச சைவ உணவாளர் ஒன்றியத்தின் பிரதான இணைய தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளமையால், உல்லாசப்பயணிகள் தமக்கு வேண்டிய தகவல்களை இத் தளங்களிலேயே தேடுகின்றனர். ஆகவே தான் இலங்கை சைவ உணவாளர் சங்கம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. தரமான சைவ உணவு விடுதிகளின் அமைவிடம், தொலைபேசி / தொலைநகல் (Fax) இலக்கங்கள், மின்னஞ்சல் (e-mail) முகவரிகள், கிடைக்கும் வசதிகள் பற்றி உடன் தகவல் தருமாறு இச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தகவல் அனுப்பவேண்டிய முகவரி:
The SriLanka Vegetarian Society,
310, High Level Road, Colombo-6
மின்னஞ்சல் முகவரி: slvs@ivu.org
இச்சங்கத்தின் தற்போதைய தலைவர் பேராசிரியர் மஹிந்த பாலிகாவதான (Professor Mahinda Palihawadana)

யாழ்ப்பாணத்தில் தரமான சைவ உணவு பெறக்கூடிய இடமெதுவும் இருப்பதாகக் கூறுவதற்கில்லை. முதலீட்டாளர்கள் தரமான சைவ உணவு நிலையமொன்றை அமைத்து நடத்த முன்வர வேண்டும்.

# சிவநெறி

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் தன்மையால் கண்ணொளியும் கதிரொளியும் போல் வேறாகியும், அவையே தானேயாய் - கண்ணொளியும் ஆன்ம அறிவும் போல உடனாகியும், நின்று இறைவன் அருள் புரிகின்றான்.

''ஈறாய்முதல் ஒன்றாயிரு
பெண் ஆண் குணம் மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு
பூதம்அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொடு
எட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்இடம்
வீழிம்மிழ லையே''

என்று திருஞானசம்பந்தர் இதனை விளக்கியுள்ளார்.

இறைவனுடைய பெருங்கருணையை நினைந்து நினைந்து நாம் உருகி வழிபாடு செய்தல் வேண்டும். இல்லையேல் நன்றி மறந்த பாவத்துக்கு ஆளாவோம்.

இறைவனுடைய திரு ஐந்தெழுத்தை இடையறாது ஓதினால் பிறவிப் பெருங்கடலை எளிதில் கடந்து விடலாம்.

சித்தத்தில் தித்திக்கும் மந்திரம் பஞ்சாக்கரம் சித்திக்கும். முத்திக்கும் மூல காரணம்.

''ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு
தெய்வமும்
ஒன்று கண்டீர் உலகுக்கு
உயிராவது
நன்று கண்டீர் நமச்சிவாயப்பழம்
தின்று கண்டேற்கிது
தித்தித்த வாறே''

— திருமந்திரம்

சிவபஞ்சாட்சரத்தை அன்புடன் ஓதும் உத்தமர்க்குத் தரித்திரம் உண்டாகாது. இம்மை, மறுமை, வீடு என்ற மும்மை நலன்களும் உண்டாகும்.

''விச்வேச்வராய நரகார்ணவ
தாரணாய
கர்ணாம்ருதாய சசிசேகர
தாரணாய
கர்ப்பூர காந்தி தவளாய
ஜடாதராய
தாரித்திரிய துக்க தஹனாய
நமச்சிவாய''

''நரகமாகிய கடலைத் தாண்டச் செய்கின்றவன் சிவன். தரித்திரமாகிய துக்கத்தைத் தகனஞ்செய்கின்றவன்'' என்று வசிட்ட முனிவர் சிவபெருமானைத் துதி செய்கின்றார்.

''ஆயிரம் எழுத்தல்ல, நூறு எழுத்தல்ல, பத்து எழுத்தல்ல, ஐந்து எழுத்துத்தானே, இதைக்கூட உச்சரிக்கக் கூடாதா?'' என்கின்றார் இராமலிங்க அடிகளார்.

''ஆயிரமன் றேநூறு மன்றேஈ
ரைந்தன்றே
ஆயிரம்பேர் எந்தைஎழுத்
தைந்தேகாண் - நீயிரவும்
எல்லும் நினைத்தியென
ஏத்துகினும் ஏத்தாய் வீண்
செல்லுமன் என்செய்கேன் செப்பு''

ஆறு நாளில் கண்ணப்பர் முத்தி பெற்றார் என்று அறிகின்றோம். அதிதீவிரமாக இறைவனிடத்தில் அன்பு செலுத்தினால் கண்ணப்பர் பெற்ற பேற்றை நாமும் பெறலாம்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் ஆனை பூசித்த தலம் திருவானைக்காவும், எறும்பு பூசித்த தலம் திருஎறும்பூரும் காட்சி தருகின்றன.

பெரிய பிராணி யானை, சிறிய பிராணி எறும்பு. எறும்பு முதல் யானை ஈறாக என்பார்கள். யானையும் இறைவனை வழிபட்டது. எறும்பும் இறைவனை வழிபட்டது. மனிதராகப் பிறந்த நாம் இறைவனை வழிபடவேண்டாமா?

இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? ஆதலால் ஒவ்வொருவரும் சிவபூசை செய்தல் வேண்டும். திருமுறைகளை ஓதுதல் வேண்டும். திருவெண்ணீறணிந்து கண்டிகை புனைந்து ஆலய வழிபாடு செய்தல் வேண்டும். இறைவனிடத்தில் இடையறாத அன்பு செய்ய வேண்டும். மால் என்றால் அன்பு. மால் ஆனார்க்கு அவன் எளியவன். அன்பு செய்வார் நெஞ்சில் நீங்காது நிற்பன்.

''தானவரு மாலும் சதுர்முகனும்
மற்றுமுள்ள
வானவருந் தேடி மயங்கவே -
ஞானமுடன்
நேயம் பெறுமடியார் நெஞ்சி
னுள்ளே நிற்பதென்ன
மாயம் சிதம்பர தேவா''

என்கின்றார் குருநமச்சிவாயர்.

இதுகாறும் கூறியவற்றால், இறைவன் எங்கும் உளன் என்பதும், முருகனும் கணபதியும் சிவனது அத்வைத நிலையைக் காட்டினார்கள் என்பதும், இறைவன் உலகமெங்கும் உறையினும் கடல் மீன் போல் உலக மாயை ஒட்டாதவன் என்பதும், தியானத்தால் அவனைக் காணலாம் என்பதும், அத்வைதம் என்ற சொல்லின் உண்மைப்பொருள் இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் நின்று தண்ணருள் புரிவதே என்பதும், அப்பரமனை வழிபட்டு ஒவ்வொருவரும் உய்தல் வேண்டும் என்பதும் விளங்கும். இவை சிவநெறியிற் காணும் உண்மைகள்.

## அப்பன் நீ அம்மை நீ .... .... ....

மாதா ச பார்வதீ தேவி பிதா தேவோ மகேஸ்வர
பாந்தவா: ஸிவபக்தாஸ்ச ஸ்வதேஸோ புவநத்ரயம்:

— ஆதிசங்கரர்

**பொருள்:**

எனக்குத் தாய் பார்வதி தேவியே; தகப்பன் தேவனான மகேஸ்வரனே;
உறவினர்கள் சிவபக்தர்களே; எனது தேசம் மூவுலகமுமே.

# சக்தியை முன்னிட்ட சிவ வழிபாடு

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அதனை அறிந்துவர அக்கினியை அனுப்பினான். அக்கினிதேவன் அங்கு சென்றான். அப்பெருஞ்சோதி நீ யார் உனது வலிமை யாது என்று வினாவியது. என் பெயர் அக்நி. நான் யாவையும் எரிக்கும் வலிமையுடையவன் என்று அக்கினிதேவன் கூறினான். அங்ஙனமாயின் இத்துரும்பை உனது வலிமையால் எரிப்பாயாக என்று அப்பரஞ்சோதி கூறியது. அக்நிதேவன் தன் முழுவலிமையைச் செலுத்தியும் எரிக்க இயலாது தோல்வியுற்றுத் திரும்பிச் சென்றான். இந்திரன் வாயுதேவனை அனுப்பினான். வாயுதேவன் அங்குச்சென்றான். நீ யார்? உனது வலிமை யாது? என்று பரஞ்சோதி முன்போலவே வினாவியது. என் பெயர் வாயு நான் யாவையும் தூக்கிச்செல்லும் வலிமையுடையவன் என்று வாயுதேவன் கூறினான். அங்ஙனமாயின் இத்துரும்பை எடுத்துச்செல்வாயாக என்று அப்பரஞ்சோதி கூறியது. வாயுதேவனும் தன் முழுவலிமையைச் செலுத்தியும் தூக்க இயலாது தோல்வியுற்றுத் திரும்பிச்சென்றான். இந்திரன் தானே நேரில் அறிந்து கொள்ளப் புறப்பட்டுச்சென்றான். அவ்வமயம் அப்பரஞ்சோதி மறைந்தது. வேறு ஒரு மின்னொளி தோன்றியது. அதுவே சக்திஸ்வருபம், மிக அழகாகச் சோபிக்கின்றாள். சிவமும் சக்தியும் அபின்னமானதால் பொன்மேனியுடன் விளங்குகின்றாள். பரமேஷ்டி என்பவர் மூன்று வேதத்தின் ஸாரமாக அ, உ, ம் என்று மூன்று எழுத்துக்களை எடுத்து ஒன்று சேர்த்து ஓம் என்ற பிரணவத்தை உருவாக்கித் தந்தார். அந்த ஓம் என்ற பிரணவமே சிவசொரூபம். அவ்வேதங்கள் விளக்கும் வேதஸாரமே சிவம் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டினார். சிவ அபின்னமானது சக்தி. ஸாமகானத்தில் மிகுந்த விருப்பமுடையவர் சிவபெருமான். ஸாம வேதத்தின் சாரமாகிய ''ம'' என்னும் எழுத்தை நடு மணியாகக் கொண்டும் கிரியா வழிபாட்டை விளக்கும் யஜுர் வேத ஸாரமாகிய ''உ'' என்னும் எழுத்தை ஆதியாகக் கொண்டும் துதி வடிவமாக அமைந்த இருக்குவேத ஸாரமாகிய ''அ'' என்னும் எழுத்தை ஈறாகக்கொண்டும் அமைந்த உமா என்று பெயர் தாங்கிநிற்கின்றாள். அந்தப்பராசக்தியைக் கண்டு அடிவணங்கி தாயே! சகல ஆன்மாக்களிடத்திலும் ஒரே மாதிரியாக அன்பு செலுத்துபவளே, ஆன்மாக்களின் தகுதியறிந்து அளந்து போக பாக்கியங்களை அளிப்பவளே. அதனாலேயே உன்னை உலகம் மாதாவென்று அழைக்கின்றதன்றோ, (மா - அளத்தல், தா - விகுதி) நான் கண்ட பொருள் யாது என்று இந்திரன் வினாவினான். மகனே! நீ முன்பு கண்ட பொருள் சிவம். அவன் அருள்தான் உங்கள் வெற்றிக்குக் காரணம், என்று கூறி மறைந்தாள். இக்கதை கேன உபநிடதத்தில் உள்ளது.

''இந்திர; அதிநராமிவ அன்யான்
தேவான்
ஸஹி ஏனம் நேதிஷ்டம் பஸ்பர்ச
ஸஹி ஏனம் பிரதமோ விதாஞ்சகார
பிரம்மேதி''

இந்திரன் மற்றத் தேவர்களை விட மேலானவன். ஏனெனில் அவன் தான் சிவத்தின் அருகில் சென்றான், சக்தியின் அருளால் முதலில் சிவத்தை அறிந்து கொண்டான், சக்தி நிபாதம் பெற்றான், பயன் பெற்றான். அக்நியும் வாயுவும் அதனைப் பெறவில்லை. ஆயினும், சக்தியின் அருள்பெற்ற இந்திரனை ஆசிரயித்து (சார்ந்து) நின்றனர். ஆகவே இரண்டாவதாக அறிந்து கொண்டனர். மற்றைத் தேவர்களை விட இம்மூவரும் மேலானவர். இக்கதை சக்தியை வழிபட்டு அவளருளால் சிவத்தை வழிபட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

## ஆகமம்

ஆகம சாஸ்திர கிரியாபத்ததியில் ''சக்தி ஆதி சக்திபர்யந்தம் அப்பியர்ச்சிய'' என்ற வாக்கியமுள்ளது. சக்தியை ஆதியாகக் கொண்டு சக்தியை முடிவாகப் பூசித்து என்று கருத்து ஆதார சக்தயேநம: என்று பூசை தொடங்கி சக்தி மண்டலாதிபதயே பிரகிருத்யை நம: என்பது வரையிலும் பஞ்சாஸநார்ச்சனா பூஜையை முடித்து அதன்மேல் மூர்த்தி தியானம் செய்யவேண்டும் என்பது விளக்க உரையாகும். சக்தி தத்துவத்தின் மேல் சிவதத்துவம் ஸ்தாபிக்கப்படுகின்றது. இதன் மூலமும் சக்தியை முன்னிட்டே சிவவழிபாடு செய்ய வேண்டும் என்று விளக்கம் கிடைக்கின்றது.

சகலஜீவ தயாபரனாகிய சிவ பெருமான் முனிவரும் மந்திர வழிபாட்டினரும் ஞானிகளும் யோகிகளும் தியானம் செய்து பூஜித்து நலம் பெறும் காரணமாக சுத்தமாயையினால் பலரூபங்களைத் தாங்கினார், என்று சுப்பிரபேதம் கூறுகின்றது.

''யதீநாம் மந்திரிணாம் சைவயோகி
நாம் ஞானினாம் ததா
தியான பூசாநிமித்தம்ஹிதநூர்
கிருஹ்ணாதி மாயயா''

சிவசக்திஸ்வரூபமும் கார்யவேறுபாடுகளைக் கொண்டு இலக்குமி சரசுவதி சாவித்திரி துர்க்கை என்னும் பலரூபங்களைத் தாங்கியுள்ளது. என்று காளிகாபுராணம் கூறுகின்றது.

''மாயை கா பின்ன ருபேண கமலாக்
யாஸரஸ்வதீ
ஸாவித்திரீ ஸாச யந்தியாச பூதா
கார்யஸ்ய பேதத''

---

**அப்பன் நீ அம்மை நீ .........**

மாதா ச பார்வதீ தேவி பிதா தேவோ மஹேஸ்வர:
பாந்தவா: ஷிவபக்தாஸ்ச ஸ்வதேஸோ புவநத்ரயம்:

—ஆதிசங்கரர்

பொருள்: எனக்குத் தாய் பார்வதி தேவியே;
தந்தை தேவனான மகேஸ்வரனே;
உறவினர்கள் சிவ பக்தர்களே;
எனது தேசம் மூவுலகமுமே

உ

# பல்துறை அறிஞர் பண்டிதர் க. சச்சிதானந்தன்

## கௌரவ கலாநிதிப் பட்டம் பெறுகிறார்

சிறந்த கல்விமானும் இலக்கியப் படைப்பாளியும், யாழ்ப்பாணச் சோதிட மரபினைச் சேர்ந்தவருமாகிய பண்டிதர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் அவர்களுக்கு யாழ். பல்கலைக் கழகம் 06-10-2001 அன்று நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்திலே 1921 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 19 ஆம் நாள் பிறந்த திரு. சச்சிதானந்தன் தும்பளை தட்டாதெருப் பாடசாலை, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகிய கல்விச்சாலைகளில் கற்று தமிழிலும் ஆங்கிலத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றபின் 1941 இல் ''மதுரைப் பண்டிதர்'' பட்டத்தைப் பெற்றார். தனது தந்தையாரிடமிருந்து மரபுவழியில் சோதிடக் கலையையும் புராணபடன முறையையும் கற்றுக் கொண்டார். சிவப்பிரகாச தேசிகர், சுப்பிரமணிய சாஸ்திரிகள், மாவை கு. பாலசுந்தரக் குருக்கள் ஆகியோரிடம் வடமொழியைக் கற்றுத் தேர்ந்தார்.

இலண்டன் மற்றிக்குலேசன் இன்ரர் சயன்ஸ் தகைமையுடன் பல கல்லூரிகளில் கணித ஆசிரியராகக் கடமையாற்றினார். அச்சமயம் தமிழைச் சிறப்புப் பாடமாகவும் வடமொழியைத் துணைப்பாடமாகவும் கற்று இலண்டன் பல்கலைக் கழகக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்ற பின் யாழ் இந்துக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரிகளில் உயர்தர மாணவர்களுக்குத் தமிழ் ஆசானாகவும் பரமேஸ்வராக் கல்லூரியில் கணித விஞ்ஞான ஆசிரியராகவும் பணியாற்றினார். 1967 முதல் ஓய்வு பெற்ற 1987 வரை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உப அதிபராகவும் உளவியல் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

இலண்டன் பல்கலைக்கழகம் இவருக்கு 1960இல் கல்வி டிப்ளோமாவையும் 1978இல் முதுதத்துவ மாணி (M. Phil) பட்டத்தையும் வழங்கியது. 1966 இல் இலண்டன் அரச வானியற் கழகம் (Royal Astronomical Society) திரு. சச்சிதானந்தன் அவர்களை ஒரு சமபங்காளி (Fellow) ஆகத் தேர்ந்தெடுத்தது.

சிறந்த ஆக்க இலக்கியகாரரான பண்டிதர் சச்சிதானந்தன் அவர்களின் ஆனந்தத்தேன் எனும் கவிதைத் தொகுதி சாகித்திய மண்டல விருதினையும் யாழ்ப்பாண காவியம் வடகிழக்கு மாகாணக்கல்வி விளையாட்டு அலுவல்கள், அமைச்சின் இலக்கியப் பரிசினையும் 2000 ஆம் ஆண்டுக்குரிய சம்பந்தன் விருதினையும் பெற்றன.

பண்டிதர் அவர்கள் மாவை முருகன், தியாகமாமலை, தமிழர் யாழியல் எனும் நூல்களையும் இசை நாடகங்கள், கவிதைகள், நாவல்கள், சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழி அறிஞராகவும், சோதிடம், வானியல், கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் தேர்ச்சியுடையவராகவும் சிறந்த இலக்கியப் படைப்பாளியாகவும் விளங்கும் ஆயிரம் பிறை கண்டு விட்ட பண்டிதர் சச்சிதானந்தன் அவர்கள் நலமுடன் வாழ்ந்து தமிழுக்குப் பெருமை சேர்க்க எல்லாம் வல்ல பரம்பொருள் துணை நிற்பதாக.

---

### அழியா முத்தி ஆனந்தம்

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன் மலர்த்தாள் எழுதா மறையின்
ஒன்றும் அரும்பொருளே! அருளே! உமையே! இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே!

— அபிராமிப்பட்டர்

---

### ஶ்ரீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை

நிகழ்த்துபவர்: **பேராசிரியர் சபா. ஜெயராசா**

இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்

நாள்: 08-10-2001 திங்கட்கிழமை பி. ப. 3.00 மணி

பொருள்: **சைவசித்தாந்தக் கல்வியும் பரத நடனமும்**

(பேருரை தமிழில் நிகழ்த்தப்படும்)

# இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகள் — 2001
# சித்தி பெற்றோர் விபரம்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினர் 2001 ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடத்திய இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வில் சித்திபெற்றோர். விபரம்:

## இளஞ் சைவப்புலவர்

இரண்டாம் பிரிவு:

01. திரு. பரமலிங்கம் ஜெயக்குமார் (கோண்டாவில்)
02. திரு. சண்முகலிங்கம் முகுந்தன் (இணுவில்)
03. செல்வி அஜந்த கௌரி துரைச்சாமி (மானிப்பாய்)
04. திரு. ஆறுமுகம் சிவகுமார் (பண்டத்தரிப்பு)
05. திரு. கணேசபிள்ளை கிருபாகரன் (கோப்பாய்)
06. திரு. சண்முகநாதன் நவநீசன் (கோண்டாவில்)
07. திரு. குகநாதன் செந்தில்குமரன் (கோண்டாவில்)
08. செல்வி நந்தினி சிவகுரு (இணுவில்)
09. திரு. குலசிங்கம் றஜீவன் (சுன்னாகம்)

மூன்றாம் பிரிவு:

01. செல்வி விஜிதா வரதராஜா (சண்டிலிப்பாய்)
02. செல்வி பிரிந்தா பரராசசிங்கம் (சண்டிலிப்பாய்)
03. திரு. பாலசுப்பிரமணியம் சத்தியமூர்த்தி (இணுவில்)
04. செல்வி கலாராணி நடராசா (இணுவில்)
05. திரு. கணேசு உமாசுதன் (இணுவில்)
06. செல்வி கோதண்டவாணி கோகிலரதன் (பருத்தித்துறை)

## சைவப்புலவர்

இரண்டாம் பிரிவு:

01. செல்வி சுறாகினி மார்க்கண்டு (அளவெட்டி)
02. செல்வி உமிலாதேவி உலகநாதன் (கோப்பாய்)
03. செல்வி கார்த்திகா சரவணபவன் (தாவடி)
04. திரு. வேலாயுதர் ஜெயகுரு (சுழிபுரம்)
05. திரு. அப்பாத்துரை கருணாகரன் (சுழிபுரம்)
06. திரு. வேலாயுதபிள்ளை கமலேஸ்வரன் (கொக்குவில்)
07. செல்வி விமலநாயகி கணபதிப்பிள்ளை (கரவெட்டி)
08. செல்வி கோகிலவதனி நாகமுத்து (கொடிகாமம்)
09. செல்வி கேமலோஜினி கனகரட்ணம் (ஆனைக்கோட்டை)
10. திரு. திருநாவுக்கரசு தீபன் (சண்டிலிப்பாய்)
11. செல்வி றூபி திருநாவுக்கரசு (சண்டிலிப்பாய்)
12. திருமதி தயாநிதி சத்தியரூபன் நீர்வேலி)
13. திரு. பொன்னுத்துரை சந்திரவேல் (ஏழாலை)
14. திரு. சிவதாஸன் மதனமோகனராஜ் (குப்பிளான்)
15. திரு. வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன் (திருகோணமலை)
16. செல்வி ரேவதி செல்வராசா (நீர்வேலி)
17. செல்வி ஜெயந்தி கோபாலபிள்ளை (கொக்குவில்)
18. திரு. வெற்றிவேல் சக்திவேல் (வட்டுக்கோட்டை)

மூன்றாம் பிரிவு:

01. திரு. அம்பலவாணர் இராஜரட்ணம் (யாழ்ப்பாணம்)
02. செல்வி மனோரஞ்சினி சுப்பிரமணியம் (வட்டுக்கோட்டை)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்,
125, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
15-09-2001

**வ. கந்தசாமி**
கௌரவ தேர்வுச் செயலாளர்.

---

உ
சிவமயம்

# சைவசமயப் பெருநாட்கள்

## (புரட்டாதிப் பூரணை முதல் ஐப்பசிப் பூரணை வரை)

| | | | | |
|---|---|---|---|---|
| புரட்டாதி | 16 உ | (02-10-2001) | செவ்வாய் | பூரணை விரதம் |
| | 20 உ | (06-10-2001) | சனி | சங்கடஹர சதுர்த்தி, கார்த்திகை விரதம் |
| | 28 உ | (14-10-2001) | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| | 30 உ | (16-10-2001) | செவ்வாய் | அமாவாசை விரதம் |
| | 31 உ | (17-10-2001) | புதன் | நவராத்திரி விரதாரம்பம் |
| ஐப்பசி | 01 உ | (18-10-2001) | வியாழன் | ஐப்பசி மாதப்பிறப்பு |
| | 03 உ | (20-10-2001) | சனி | சதுர்த்தி விரதம் |
| | 05 உ | (22-10-2001) | திங்கள் | ஷஷ்டி விரதம் |
| | 06 உ | (23-10-2001) | செவ்வாய் | சரஸ்வதி பூஜாரம்பம் |
| | 08 உ | (25-10-2001) | வியாழன் | மஹாநவமி, சரஸ்வதி பூஜை, கேதாரகௌரி விரதாரம்பம் |
| | 09 உ | (26-10-2001) | வெள்ளி | விஜயதசமி, ஸமீவிருட்ச பூசை |
| | 12 உ | (29-10-2001) | திங்கள் | பிரதோஷ விரதம் |
| | 14 உ | (31-10-2001) | புதன் | பூரணை விரதம் |

(மாணவர் பகுதி)

உ

# நவராத்திரி விழா

**அன்புக் குழந்தைகளே!**

அன்பு வணக்கங்கள். இன்னும் இருவாரங்களில் நவராத்திரி விரதம் ஆரம்பமாகிறது. இவ்விழாக்காலத்தில் பாடசாலைகள், கோவில்கள், பொது இடங்கள், வீடுகள், தொழில் கூடங்கள் எங்குமே சிவபெருமானின் திருவருட் சக்திக்கு விழாவெடுத்து போற்றி ஆராதிக்கிறோம்.

இவ்வுலகத்தில் எந்தவொரு சீவராசி மீதும் அதன் அன்னையை விட அதிக அன்பு வைத்திருப்பவர் எவருமில்லை. எமக்குப் பயம், ஆபத்து, துக்கம் வரும் போதெல்லாம் எமது வாய் - எந்த வயதிலும் சரி - எம்மை அறியாமலேயே ''அம்மா'' என்றழைக்கிறது. தாய் சொரியும் அன்பினாலே நம்பிக்கை பெற்ற குழந்தை தாயைத் தனக்குற்ற துணையாகக் கொள்கிறது. ஆனால் அந்தத்தாய் இப்பிறவிக்கு மட்டும் தான். அண்ட சராசரங்களையெல்லாம் படைத்துக்காத்து சீவராசிகள் அனைத்திற்கும் எல்லாப் பிறவிகளிலும் தாயாக விளங்குபவள் அம்பிகை. அவள் தாயிற் சிறந்த தயவுடையவள். ஆகவே அவளே எமக்குச் சிறந்த துணை - பெருந்துணை - உயிர்த்துணை.

நாமெல்லோரும் என்றும் எப்பிறவியிலும் உலக மாதாவாகிய அம்பிகையின் குழந்தைகள். தாய் - சேய் உறவுக்கு அடிப்படை நம்பிக்கையும் சரணாகதியுமே, அம்பாள் மீது பூரண நம்பிக்கை வைத்து .''நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது ஒன்றேயுமில்லை: உனக்கே பாரம்'' என அவளிடம் சரணாகதி அடைந்து விட்டால் அவள் எமக்கு விழுத்துணையாக இருந்து எம்மையென்றும் காப்பாள்.

அன்னையைத் தோத்திரம் செய்து தொழ எமக்குக் கிடைத்துள்ள சிறந்த நூல் அபிராமி அந்தாதி. அபிராமி அந்தாதி பற்றியும் அதனையாத்த அபிராமிப்பட்டர் பற்றியும் உங்கள் சகோதரர் ஒருவர் எழுதிய கட்டுரையொன்று இம்மலரை அலங்கரிக்கிறது. அபிராமி அந்தாதிப்பாடல்கள் நூற்றியொன்றையும் பொருளுணர்ந்து மனனஞ் செய்து ஓதி நல்லனவெல்லாம் பெறுவீர்களாக. மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

— ஞானகுரு

# அபிராமிப் பட்டரும் அபிராமி அந்தாதியும்

— குமாரவடிவேல் குருபரன், யாழ். இந்துக்கல்லூரி மாணவன் —

இறைவனை அன்னையாக - உலக மாதாவாகப் போற்றி வழிபடுதல் எமது சமயத்தின் சிறப்புகளுள் ஒன்று

அம்பாள் மீது பூரண நம்பிக்கை வைத்து ''நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது ஒன்றேயுமில்லை! உனக்கே பாரம்'' என அவளிடம் சரணாகதி அடைந்து விட்டால் அவள் எமக்கு விழுத்துணையாக இருந்து எம்மையென்றும் காப்பாள்.

அன்னையிடம் பூரண சரணாகதியடைந்து வாழ்ந்து - அவளது அருளுக்குப் பாத்திரமாகி - அற்புதங்கள் புரிந்த மகான்கள் பலர் இப்பூமியில் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் ஒருவர் திருக்கடவூர் அபிராமிப் பட்டர்.

செந்தமிழ்நாட்டிலே நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரைத் தந்த சீர்காழிப்பதியிலிருந்து ஒரு சில கிலோ மீற்றர் தொலைவிலே அமைந்திருப்பது திருக்கடவூர் எனும் திவ்விய தலம். இங்கு எழுந்தருளி அருள்பாலிக்கும் இறைவன் காலகாலன். காலசங்காரன். இங்கு கோவில் கொண்டுள்ள இறைவியின் பெயர் அபிராமி. அபிராமி என்றால் அழகுக்கு ஒரு வரும் ஒவ்வாத வல்லி என்று பொருள். தனது கடைக்கண் பார்வையால் நமக்கு நல்லன எல்லாம் தருபவள் அபிராமி.

யம பயத்தைப் போக்கும் அப்பனும் - நல்லனவெல்லாம் தரும் அம்மையும் - கோவில் கொண்ட திருமிகு திருக்கடவூரிலே - இற்றைக்கு ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் - சக்தி உபாசகர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் அபிராமி மீது கொண்டிருந்த தீவிர பக்தி காரணமாக அபிராமிப்பட்டர் என அழைக்கப்பட்டார்.

பட்டர் தமிழையும் வடமொழியையும் கசடறக் கற்று ஒழுக்கத்திற் சிறந்து, அன்னை அபிராமியிடம் பூரண சரணாகதி அடைந்து தேவி உபாசனையில் ஈடுபடுவாராயினர். அவர் அபிராமியையன்றி வேறெவரையும் வாழ்த்தி வணங்குவதில்லை. நெஞ்சில் வஞ்சகரோடு இணங்குவதில்லை. எனது உனது என்று இருப்பவர்களுடன் பிணங்குவதில்லை. ''பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ் நரகக் குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு'' கூடுவதில்லை.

இவரது பக்குவ நிலையை உணராத சிலர் அச்சமயம் அரசாட்சியில் இருந்த மகாராசனிடம் சென்று பட்டர் சித்த சுயாதீனமுற்றிருப்பதாக முறையிட்டனர். பட்டரைச் சோதித்துப் பார்க்கத் தீர்மானித்த அரசன் தேவி உபாசனையிலிருந்த அவரை அணுகி ''இன்று அமாவாசை எத்தனை நாழிகை வரை இருக்கின்றது?'' என வினாவினான்.

விழிநீர் மல்கி - மெய்ப்புளகம் அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி - அறிவிழந்து - சுரும்பிற் களித்து - இன்ப வெள்ளத்தில் திளைத்து - பார்க்கும் திசைதொறும் அல்லலெல்லாம் தீர்க்கும் திரிபுரையாள் திருமேனி மட்டுமே தெரிகின்றவொரு நிலையில் இருந்தமையால் ஏற்பட்ட மொழித் தடுமாற்றமோ?

அல்லது நாமெல்லாம் நலம்பெற ''அபிராமி அந்தாதி'' என்னும் தேனமுதைப் பட்டரின் வாயிலிருந்து வெளிக்கொணர அன்னை ஆடிய திருவிளையாடலோ? ஆரறிவார்?

பட்டர் ''இன்று பூரணையல்லவா?'' எனப் பதிலிறுத்தார்.

மன்னருக்கு அளித்த தவறான பதிலினால் பட்டரின் புலமைக்குக் களங்கம் ஏற்பட்டது.

(15ம் பக்கம் பார்க்க)

# அபிராமிப் பட்டரும் அபிராமி அந்தாதியும்

(14ம் பக்கத் தொடர்ச்சி)

அபிராமியின் திருவடிகளன்றித் தஞ்சம் பிறிதில்லை என அன்னையின் தவ நெறிக்கே நெஞ்சம் பயின்று, வாழும்படியொன்று கண்டு கொண்ட பட்டர் மனம் தளரவில்லை.

தமது சித்தாம்புயத்து அமர்ந்திருக்கின்ற தையல் நல்லாளின் சரணாம்புயத்தையன்றி வேறெதனையும் தஞ்சமெனக் கண்டறியாத பட்டர், அம்பாளின் ஆலயத்தின் முன்னே ஒரு குழி தோண்டி அக்குழிக்கு மேலே உறி போன்றதொரு ஆசனம் அமைத்து, அவ்வுறி ஆசனத்தை நூறு கயிறுகளினால் தொங்கவிட்டு, குழியிற் தீ மூட்டி விட்டு, உறி ஆசனத்தில் அமர்ந்து கொண்டு தன் குறைதீர அபிராமியை ஏத்துகிறார். அப்போது - அவர் வாயினின்று பிரவாகித்த ஊற்றுத்தான் அபிராமி அந்தாதி. அந்தாதியின் முதற் பாட்டு:

**உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும் தோயமென்ன**
**விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.**

தமது விழுத்துணை - பெருந்துணை - சிறந்த துணை - உயிர்த் துணை அபிராமியன்றி வேறெவருமில்லை என்ற பட்டரது வைராக்கியம் அவரது முதற் பாடலிலேயே வெளிப்படுவதைக் காண்கிறோம்.

அபிராமியின் பெருமையையும் தாம் அவளை விழுத்துணையாகக் கொண்டதற்கான காரணங்களையும் வெளிக்காட்டும் பக்தி வைராக்கியம் நிறைந்த பாடல்களால் அன்னையை அலங்கரித்து, ஒவ்வொரு பாட்டினிறுதியிலும் அன்னை காட்சி தராமையினால் ஒவ்வொரு கயிற்றை அரிந்து கொண்டு வந்தார்.

— அம்பாளின் கடைக்கண் பார்வை நமக்குத் தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா மனம் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா இனந் தரும் நல்லன எல்லாம் தரும்.

— அன்னையின் அடியிணையைச் சாருந் தவமுடையார் படையாத தனமேயில்லை.

— அன்னையின் திருமேனியைத் தோத்திரஞ் செய்து தொழுது அவளது மின் போலும் தோற்றத்தை ஒரு மாத்திரைப் போது மனதில் வைப்பவர்கள் வண்மை, குலம், கோத்திரம், கல்வி, குணம் யாவற்றிலும் சிறப்படைவார்கள்.

— அவளைத் தஞ்சமென்று அடைந்தவர்களுக்கு இல்லாமை சொல்லி ஒருவர் தம்பாற் சென்று இழிவுபட்டு நிற்கும் நிலை ஏற்படாது.

— ஐயன் அளந்த படி இரு நாழி கொண்டு அண்டமெல்லாம் உய்ய அறஞ்செய்து சீவராசிகள் அனைத்திற்கும் அன்னபூரணியாக உணவளித்துக் காப்பவள் அந்த அன்னை.

— நாம் வெறுக்கும் தகைமைகள் செய்யினும் அவற்றைப் பொறுத்துக் கொள்பவள் அவள். அது தானே தாயின் பண்பு. இத்தகு பண்பு கொண்ட லோகமாதா அன்றோ எமக்கு விழுத்துணை.

இவ்வாறு பாடிப்பாடி ஒவ்வொரு கயிறாக அறுத்துக் கொண்டு வரும்போது

**''விழிக்கேயருளுண்டு அபிராம வல்லிக்கு வேதஞ் சொன்ன**
**வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்**
**பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ் நரகக்**
**குழிக்கே அழுந்தும் கயவர்தம்மோடு என்ன கூட்டினியே''**

என்ற எழுபத்தொன்பதாவது பாடலைப் பாடி முடித்ததும் அபிராமி அவருக்குக் காட்சி கொடுத்து அருள் புரிந்து தமது திருத்தோடொன்றைக் கழற்றி ஆகாயத்தே வீசியருள அது முழு நிலாவாகக் காட்சி தந்து பட்டருக்கு மன்னர் முன் ஏற்பட்ட தலைகுனிவைப் பாராட்டுதலாக மாற்றிற்று.

அன்னை காட்சிதந்து மறைந்த திக்கைப் பட்டர் வணங்கி கயிறுகளை அரியாது மிகுதிப் பாடல்களைப் பாடி அந்தாதியைப் பூர்த்தி செய்து பெரும் அநுபூதிமானாக வாழ்ந்து தேகாந்தத்தில் அபிராமியின் திருவடி நீழலை அடைந்தனர்.

ஆகவே எம் விழுத்துணையாம் அன்னையிடம் சரணாகதி அடைந்து அபிராமி அந்தாதியைப் பக்தி சிரத்தையுடன் பொருளுணர்ந்து ஓதி அவளருள் பெற்று சிறப்புடன் வாழ்வோமாக.

## தீந்தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே வருக வருக

தொடுக்கும் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே நறை பழுத்த
துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்குந் தொழும்பருளக் கோயிற் கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும் இளமென் பிடியே எறிதரங்க
முடுக்கும் புவனங் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்தும் இளவஞ்சிக் கொடியே வருகவே
மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே வருக வருகவே.

— குமரகுருபர சுவாமிகள்
(மீனாட்சி பிள்ளைத்தமிழ்)

# St. Meikandadeva and Ganesa

— **Ratna Ma Navaratnam**, M A., D. Litt. (Jaffna) —

The author of Sivajnanabotham was called in early life Swethavana and after he attained spiritual eminence was called Meikanda Deva (Truth finder). He lived in Tiruvennainallur, situated on the banks of the lower Pennar river. It happened that the child was dumb from its birth, but the bent of its mind was discovered in its play which consisted in making *Sivalingam* of sand and becoming absorbed in its contemplation.

One day, a Jivan Mukta (realised sage) passing that way saw the small child in its play and was attracted to it. He saw the child's advanced spiritual condition and touched his head and called him Meikanda Deva. Then he instructed him in the truth contained in Sivajnana - botham, and directed the child to spread its message to the world.

The child retained his silence till his fifth year was past, during which interval, its stated, that he was receiving further instruction from God Ganesa of Tiruvennainallur. Ganesa in this particular temple was called Pollap - Pillayar (பொள்ளாப் பிள்ளையார்) and the abstract of the "Twelve Sutras" (aphorisms) and the various arguments called "churnika", are said to have been imparted to Meikanda Deva by Pollap Pillayar.

After his fifth year, he began to speak out and preach the truth contained in Sivajnanabotham to a large body of disciples, including the scholarly savant Arulnandi Sivachariar. Thus it will be seen that Ganesa who was responsible for writing the great epic Mahabharata at sage Vyasa's dictation, was also Meikanda Deva's preceptor, who instructed him to bring out the Saiva - Siddhanta classic of Sivajnanabotham.

In this text, there occurs the opening shield stanza to Pollap - Pillayar.

"Kallal nilalmalai
Villar aruliya
Pollar inaimalar
Nallar punaivare"

"கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொள்ளார் இணைமலர்
நல்லார் புனைவரே"

"O Dhakshinamurti under the banyan tree at Kailas,
Destroyer of Tripura with the bow of Meru, Thy
Saviour - son at Vennain - allur, we invoke and place
His fragrant Feet on our heads"

Under the shady banyan tree at Mount Kailas, Lord Siva in the form of the silent teacher Dhakshinamurti taught the wisdom of the Vedas to the four primary disciples, Sanaka, Sanatkumara, Agastya and Pulathya. He destroyed the triple city of iron, silver and gold, which impeded the progress of man to the goal of self - realisation, by bending Mount Meru to serve as His bow. Great Siva's son is Ganesa, enshrined in his natural form of Pollap Pillayar at Tiruvennainallur. Let us all with one accord worship Him, like the blessed votaries who contemplate on His lotus - like Feet, and attain the beatific illumination of Father Sivam.

In the same metrical starin, the mystic poem of yogic experience known as *Nishtanubhuti* invokes in the opening verse, the protecting armour of the elephant - faced God's grace in a couplet of exquisite beauty.

"அத்தி முகனடி நித்த
நினைபவர்
சித்தி திருவொடு முக்தி
பெறுவரே"

"Athi mukanadi nitha
ninaipavar
Sidhi tiruvodu mukti
peruvare"

By constant *dhyanam* on
the Feet of the Elephant-faced
One is blessed with success,
fulfilment and freedom.

Such shield songs (Kaapu- காப்பு) at the commencement of all religious texts and Puranas have been in vogue right from the early days of Saivism to the modern times. Propitiation of Pillayar, the Son of Siva was an indispensable part of any undertaking in the Hindu fold.

"Pervading the world as the First letter A,
Mingling with the letters U and M in unison,
Primordial word that diversifies at will,
Assuming many forms in manifestation,
Thou doth clear all hurdles in the path
For the attainment of the four ends of life,
Thou doth bequeath grace to them who adore Thee,
And restrain them who wander away from Thee
Immaculate Ganapati, we meditate on Thee."
Invocation Ode, Vinayaka Puranam

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Saiva Paripalana Sabai - Jaffna of 450, K. K. S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K. K. S. Road, Jaffna. 02-10-2001 (Fullmoon Day).